1967 ஜுலை 10]

செய்யப்படுகின்ற இன்ஜின்களேயும் சர்க்கார் இப்பொழுது வழங்கி வருவதால் அந்தக் குறைபாடு இருந்துகொண்டு வருகிறது. இந்தக் குறைபாடு பரவலாகத் தீர்க்கப்படுவது குறித்து யோசனை செய்யப்பட்டு வருகிறது.

கால்நடைக் காப்புறுதித் திட்டம்

*236 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாடுகளுக்கான இன்சூரன்ஸ் திட்டம் அமுலில் வந்து விட்டதா?

(இ) இல்லையென்றால், எப்போது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இவ்வேலைத் திட்டம் இம்மாநிலத்தில் இன்னும் செயலுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) நான்காவது திட்டக்காலத்தில் கால்நடைக்காப்புறுதித் திட்டத்தைக் Cattle Insurance Scheme குறிப்பிட்ட சில பகுதிகளில் முன்னேடி அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என வேளாண்மைப் புள்ளிவிவர ஆராய்ச்சிக் கழகம் (இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்) கருத்து தெரிவித்துள்ளது. காப்புறுதி செய்யத்தக்க வயதுள்ள மாடுகள், எருமைகள், இவற்றின் மரண வீதம் பற்றி குறிப்பிட்ட சில பகுதிகளில் புள்ளி விவரம் சேகரிக்க ஆய்வு ஒன்றை முன்னேடி வேலையாக நடத்த வேண்டும் என இக்கழகம் விருப்பம் தெரிவித்தது. காப்புறுதிக் கட்டண விதங்களேயும் இழப்பீடு விவரங்களேயும் கணக்கிடுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு வேலை 4—7—1966 முதற்கொண்டு விலங்கின வளர்ப்புத்துறையினல் காஞ்சீபுரம் ஸ்ரீபெரும்பூதூர் கால்நடை வளர்ச்சி மும்முரத்திட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு வேலை முடிந்து, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினல் காப்புறுதிக் கட்டண வீதங்கள் நிச்சயிக்கப்பட்டவுடன்தான், குறிப்பிட்ட சில பகுதிகளில் கால்நடைக் காப்புறுதி வேலைத்திட்டம் முன்னேடி அடிப்படையில் செயல்படுத்தலாம்.

திரு. என். சங்கரய்யா: கால்நடைகளுக்குப் பலவிடங்களில் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்படுவதால் கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை இந்த மாநில சர்க்கார், இந்த ஆய்விற்குப் பிறகு ஏற்றுக்கொண்டு, நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவடைவதற்குள் முக்கியமான மாவட்டங்கள் பலவற்றுள் இதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டபடி, இப்பொழுது ஆய்வு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. பசு, எருமை மாடுகளின் வயது என்ன, எவ்வளவு காலம் அவை உயிரோடு இருக்கும், ப்ரீமியம் எவ்வளவு கட்ட

வேண்டும் என்பதற்கான விதி முறைகள் வகுக்கப்பட்டு, கொள்கை அளவில் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு செயல் படுத்த வேண்டுமென்று தான் இப்பொழுது ஸ்ரீபெரும்பூதூர்ப் பகுதியிலும், காஞ்சீபுரம் பகுதியிலும் இந்த ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. விரைவிலே இந்த ஆய்வு முடியுமானால், இதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : குறிப்பிட்ட சில பகுதிகளில் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறிப்பிட்ட பகுதிகளை நிர்ணயிப்பதற்கு என்ன என்ன காரணங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. எங்கே கால் நடைகள் அதிகம் இருக்கின்றனவோ, எங்கே கால்நடைகளுக்கு வியாதிகள் அதிகமாகப்பரவி, அவை பாதிக்கப்படுகின்றனவோ, அந்தப் பகுதிகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, இந்தத் திட்டம் அமலாக்கப்படும்.

More Milk Day

* 237 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the object of celebrating annually "More Milk Day"—

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால் உற்பத்தியைப் பெருக்கி மேன்மேலும் பால் பருகுவதன் முக்கியத்துவத்தைப் பொதுவாக மக்கள் உணர வேண்டுமென்கிற நோக்கத்துடன், அரசு ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று "பால் பெருக்கு நாளைக்" கொண்டாடுமாறு ஆணையிட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : பால் உற்பத்தித் தினம் என்று சொல்லி, தமிழ்ப் புத்தாண்டு நாள் அன்று மாத்திரம் ஏழைகளுக்கோ மற்றவர்களுக்கோ பாலை வழங்கி அவர்கள் குடிக்க வேண்டும் என்று வைத்திருந்த அந்தத் திட்டத்தின் பயனை எல்லா நாட்களிலுமே பால் வருமா ? அல்லது, ஏதோ விழா வருவதைப்போல், ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டு வரும்போது பால் கொடுக்கப்பட்டு, மறு நாளே அது மறைந்துவிடுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்றுக்கொண்ட திட்டம் அல்ல. ஏற்கனவே இருந்து வருகிறது. தமிழ்ப் புத்தாண்டு நாளிலே வழங்கினார்கள். அதனுடைய தொடர்பாக, ஏற்கனவே எப்படி நடந்ததோ அப்படி தான் இப்போதும். நிலைமை மாறுவதற்கு, பால் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வேண்டிய திட்டங்களையும் புதிய சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது.

DR. H. V. HANDE : What are the concrete measures that this Government propose to take to increase the quantum of milk by increasing cattle wealth?